Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 39/2023

**2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின்**
**அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**
**திரு. சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | எஸ்டேட் வேலை |
| பெயர் | - | பிரேமா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | செல்வக்குமார் | சமயம் | - | |
| கிராமம் | - | சிறுகுன்றா எஸ்டேட் | வயது | - | 36 |
| சாதி | - | | | | |

**15.02.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் சிறுகுன்றா எஸ்டேட்டில் வசித்து எஸ்டேட் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. 19-01-2023 அன்று சிறுகுன்றா வீட்டுக்கு பக்கத்தில் உள்ள ரோட்டில் பைக் விழுந்த சத்தம் கேட்டது. போய் பார்த்தபோது பைக் கீழே விழுந்துகிடந்தது. 3 பேர் பைக்கிக்கு கீழே உட்கார்ந்து இருந்தார்கள். வேறு எதுவும் எனக்கு தெரியாது.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. நான் சென்று பார்த்தபோது ஒரு ஸ்கூட்டி வண்டியில் நான்குபேர்கள் ரோட்டில் கீழே விழுந்து அடிபட்டு கிடந்தார்கள் அதை நான் பார்த்தபோது எங்கள் எஸ்டேட்டை சேர்ந்த கிளம்மெண்ட், நாராயணசாமி மற்றும் சிலர்கள் இருந்தார்கள் கீழே விழுந்துகிடந்தவர்களை விசாரிக்க ஸ்கூட்டி வாகனத்தை ஓட்டி வந்தவர் சின்கோனா எஸ்டேட்டை சேர்ந்த மணிகண்டன் என்றும் அவருக்கு இடது காலில் சிராய்ப்பு காயமும் பின்னால் உட்கார்ந்து வந்த நந்தகுமார் என்பவருக்கு காலில் சிராய்ப்பு காயமும், மகேஷ் என்பவருக்கு தலையிலும் இடுப்பிலும் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அங்கு கிளம்மெண்ட் நாராயணணசாமி இருந்தார்கள் நான் வீட்டிற்கு போய்விட்டேன்.

2. கிளமெண்ட் என்னிடம் இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த மணிகண்டன் என்பவர்

அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிவந்து வளைவில் இடது பக்கம் திரும்பும்போது இரு சக்கர வாகனம் கீழே விழுந்ததில் அதில் வந்த 4 பேருக்கும் அடிபட்டு காயம் ஏற்பட்டதாக சொன்னார் நான் ஸ்கூட்டி வாகனத்தை பார்க்க TN 37 CZ 2017 என்ற எண்ணுள்ள ஸ்கூட்டி வாகனம் என தெரிந்துகொண்டேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை

3. ஸ்கூட்டி வாகனத்தில் வந்த அஸ்வின், நந்தகுமார், மணிகண்டன் ஆகியோருக்கு காயமும் விபத்தில் மகேஷ் என்பவர் இறந்துவிட்டதால் நந்தகுமார் என்பவர் வால்பாறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் பைக்கிள் யார் வந்தார்கள் என்று தெரியாது 4 பேர்கள் மட்டும் தெரியும் பசங்கள் பெயர் தெரியாது.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 39/2023

**2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | பேக்ட்ரியில் வேலை |
| பெயர் | - | ராஜேந்திரன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சின்னப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | சிறுகுன்றா எஸ்டேட் | வயது | - | 50 |
| சாதி | - | | | | |

**15.02.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் சிறுகுன்றா எஸ்டேட்டில் வசித்து பேக்டரியில் வேலை செய்து வருகிறேன். 19-01-2023 அன்று சிறுகுன்றா மதுரவீரன் கோவிலுக்கு தாண்டி பெண்டில் வேலை முடித்து வரும்போது ஸ்கூட்டிபைக் ஆக்சிடேண்ட் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். 4 பசங்க ஸ்கூட்டி ஓட்டி வந்து அடிபட்டாங்க என்று சொன்னாங்க.

2. நான் ஸ்பாட்டுக்கு வந்து பார்க்கும் போது ஒன்றும் இல்லை கூப்பிட்டு போய்விட்டார்கள். ஒரு பையன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. நான் சென்று பார்த்தபோது ஒரு ஸ்கூட்டி வண்டியில் நான்குபேர்கள் ரோட்டில் கீழே விழுந்து அடிபட்டு கிடந்தார்கள் அதை நான் பார்த்தபோது எங்கள் எஸ்டேட்டை சேர்ந்த கிளம்மெண்ட், நாராயணசாமி மற்றும் சிலர்கள் இருந்தார்கள் கீழே விழுந்துகிடந்தவர்களை விசாரிக்க ஸ்கூட்டி வாகனத்தை ஓட்டி வந்தவர் சின்கோனா எஸ்டேட்டை சேர்ந்த மணிகண்டன் என்றும் அவருக்கு இடது காலில் சிராய்ப்பு காயமும் பின்னால் உட்கார்ந்து வந்த நந்தகுமார் என்பவருக்கு காலில் சிராய்ப்பு காயமும், மகேஷ் என்பவருக்கு தலையிலும் இடுப்பிலும் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை தெரியாது.

2. என்னுடன் இருந்த பிரமிளா மற்றும் சிலரும் ஓடி சென்று பார்த்தபோது கீழே விழுந்த நபர் மகேஷ் என்றும் அவருக்கு இடுப்பிலும் தலையிலும் பலத்த மொக்கை காயம் ஏற்பட்டு கிடந்தார் என்றும் அந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த மணிகண்டன் என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிவந்து வளைவில் இடது பக்கம் திரும்பும்போது இரு சக்கர வாகனம் கீழே விழுந்ததில் அதில் வந்த 4 பேருக்கும் அடிபட்டு காயம் ஏற்பட்டதாக சொன்னார் நான் ஸ்கூட்டி வாகனத்தை பார்க்க TN 37 CZ 2017 என்ற எண்ணுள்ள ஸ்கூட்டி வாகனம் என தெரிந்துகொண்டேன்என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை வண்டி நம்பர் எல்லாம் தெரியாது பிரண்டு வேகமாக ஓட்டிவந்து இந்த மாதிரி ஆகிவிட்டது என்று சொன்னார்கள்.

3. அதை பார்த்த நாங்கள் காயம்பட்ட மணிகண்டன், அஸ்வின், மகேஷ் ஆகியோரை அந்த வழியாக வந்த கார் மூலம் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தோம் அப்போது நந்தகுமார் அந்த வழியாகவந்த சின்கோனா செல்லும் பஸ்ஸில் ஏறி சென்றுவிட்டார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நான் வருவதற்குள் எல்லாம் அனுப்பிவிட்டார்கள்.

4. ஸ்கூட்டி வாகனத்தில் வந்த அஸ்வின், நந்தகுமார், மணிகண்டன் ஆகியோருக்கு காயமும் விபத்தில் மகேஷ் என்பவர் இறந்துவிட்டதால் நந்தகுமார் என்பவர் வால்பாறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் யார் ஸ்கூட்டியை ஓட்டிவந்தார் என்று தெரியாது. விபத்துநடக்கும் சமயத்தில் ஸ்கூட்டி வேகமாக வந்ததா மெதுவாக வந்ததா என்றால் தெரியாது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 39/2023

**2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 5-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திரு. சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | கிளமெண்ட் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஜான்டேவிட் | சமயம் | - | |
| கிராமம் | - | சிறுகுன்றா எஸ்டேட் | வயது | - | 55 |
| சாதி | - | | | | |

**15.02.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் சிறுகுன்றா எஸ்டேட்டில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். 19-01-2023 அன்று சாய்ந்திரம் 6.30 மணிக்கு சிறுகுன்றா எஸ்டேட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் டமார் என்று சத்தம் கேட்டது. ஒரு சின்ன குழந்தை வந்து தண்ணீ கொடுங்க மாமா ஒருவர் அடிபட்டு கிடக்கிறார் என்று சொன்னார். நான் அங்கு போய் பார்த்தபோது 4 பேர் அடிபட்டு கிடந்தார்கள். ஒருவர் ரொம்ப முடியாமல் கிடந்தார். அந்த சமயத்தில் ஒரு கார் வந்தது.

2. அவர் நான் வேணுமானால் கொண்டுபோய் ஆஸ்பிட்டலில் சேர்க்கிறேன் என்று சொன்னார். அடுத்த நாள் காலையில் வந்து போலீசார் விசாரித்தார்கள். மறுநாள் ஒரு காவல் துறை என்னை தேடிக்கொண்டு வந்தார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கிக்கொண்டு விசாரணை செய்தார்கள். நேடியாக பார்த்தீர்களா என்ன நடந்தது என்று கேட்டு விசாரணை செய்தார்கள் அதற்காகத்தான் கையெழுத்து போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1-வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகஜரில் உள்ள 1-வது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. நான் சென்று பார்த்தபோது ஒரு ஸ்கூட்டி வண்டியில் நான்குபேர்கள் ரோட்டில் கீழே விழுந்து அடிபட்டு கிடந்தார்கள் அதை நான் பார்த்தபோது எங்கள் எஸ்டேட்டை சேர்ந்த நாராயணசாமி மற்றும் சிலர்கள் இருந்தார்கள் கீழே விழுந்துகிடந்தவர்களை விசாரிக்க ஸ்கூட்டி வாகனத்தை

ஓட்டி வந்தவர் சின்கோனா எஸ்டேட்டை சேர்ந்த மணிகண்டன் என்றும் அவருக்கு இடது காலில் சிராய்ப்பு காயமும் பின்னால் உட்கார்ந்து வந்த நந்தகுமார் என்பவருக்கு காலில் சிராய்ப்பு காயமும், மகேஷ் என்பவருக்கு தலையிலும் இடுப்பிலும் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம்.

2. என்னுடன் இருந்த பிரமிளா மற்றும் சிலரும் ஓடி சென்று பார்த்தபோது கீழே விழுந்த நபர் மகேஷ் என்றும் அவருக்கு இடுப்பிலும் தலையிலும் பலத்த மொக்கை காயம் ஏற்பட்டு கிடந்தார் என்றும் அந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த மணிகண்டன் என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிவந்து வளைவில் இடது பக்கம் திரும்பும்போது இரு சக்கர வாகனம் கீழே விழுந்ததில் அதில் வந்த 4 பேருக்கும் அடிபட்டு காயம் ஏற்பட்டதாக சொன்னார் நான் ஸ்கூட்டி வாகனத்தை பார்க்க TN 37 CZ 2017 என்ற எண்ணுள்ள ஸ்கூட்டி வாகனம் என தெரிந்துகொண்டேன்என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அது பற்றி தெரியவில்லை.

3. அதை பார்த்த நாங்கள் காயம்பட்ட மணிகண்டன், அஸ்வின், மகேஷ் ஆகியோரை அந்த வழியாக வந்த கார் மூலம் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தோம் அப்போது நந்தகுமார் அந்த வழியாகவந்த சின்கோனா செல்லும் பஸ்ஸில் ஏறி சென்றுவிட்டார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4. ஸ்கூட்டி வாகனத்தில் வந்த அஸ்வின், நந்தகுமார், மணிகண்டன் ஆகியோருக்கு காயமும் விபத்தில் மகேஷ் என்பவர் இறந்துவிட்டதால் நந்தகுமார் என்பவர் வால்பாறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

5. இது சம்பந்தமாக 20-01-2023 அன்று காலை 8.00 மணிக்கு சம்பவயிடம் வந்து போலீசார் விசாரணை செய்து சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் அந்த பார்வை மகஜரில் நானும் நாராயணசாமியும் சாட்சியாக இருந்து கையொப்பம் போட்டோம் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**:

1. நான் கையெழுத்து இட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது. ஆஜர் எதிரியின பெயர் என்னவென்று தெரியாது அவர் அங்கு இருந்தாரா என்றால் தெரியாது. விபத்து நடந்த போது இவர் தான் வண்டியை ஓட்டி வந்தாரா என்றால் தெரியாது. வண்டி ஓட்டமுடியாத நிலையில் தான் ரோட்டில் கிடந்தது என்றால் சரிதான்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 39/2023**

**2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | சூப்ரவைசர் வேலை |
| பெயர் | - | நாராயணசாமி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சின்னப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | சிறுகுன்றா எஸ்டேட் | வயது | - | 55 |
| சாதி | - | | | | |

**15.02.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் சிறுகுன்றா எஸ்டேட்டில் சூப்ரவைசர் வேலை செய்து வருகிறேன். 19-01-2023 அன்று மாலை 6.40 இருக்கும். சிறுகுன்றா மேம்பாலம் பெண்டில் பிரேமா வீட்டிற்கு அருகில் டம் என்று சவுண்டு கேட்டது வந்து பார்த்தபோது ஸ்கூட்டில் அடிபட்டு கீழே 4 பேர் கிடந்தார்கள். ஒரு டவேரா வந்தது அதில் 4 பேரையும் ஏற்றி வால்பாறை GH-க்கு அனுப்பிவைத்தோம்.

2. 19 ம்தேதிக்கு அடுத்த நாள் காவல் துறை வந்தார்கள். போலீசார்வந்து விசாரித்தார்கள். நடந்ததை சொன்னேன். அதற்காகத்தான் இந்த கையெழுத்தை போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகஜரில் உள்ள 2-வது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. நான் சென்று பார்த்தபோது ஒரு ஸ்கூட்டி வண்டியில் நான்குபேர்கள் ரோட்டில் கீழே விழுந்து அடிபட்டு கிடந்தார்கள் அதை நான் பார்த்தபோது எங்கள் எஸ்டேட்டை சேர்ந்த கிளமெண்ட்டு மற்றும் சிலர்கள் இருந்தார்கள் கீழே விழுந்துகிடந்தவர்களை விசாரிக்க ஸ்கூட்டி வாகனத்தை ஓட்டி வந்தவர் சின்கோனா எஸ்டேட்டை சேர்ந்த மணிகண்டன் என்றும் அவருக்கு இடது காலில் சிராய்ப்பு காயமும் பின்னால் உட்கார்ந்து வந்த நந்தகுமார் என்பவருக்கு காலில் சிராய்ப்பு காயமும்,

மகேஷ் என்பவருக்கு தலையிலும் இடுப்பிலும் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. என்னுடன் இருந்த பிரேமா, கிளமெண்ட் மற்றும் சிலரும் ஓடி சென்று பார்த்தபோது கீழே விழுந்த நபர் மகேஷ் என்றும் அவருக்கு இடுப்பிலும் தலையிலும் பலத்த மொக்கை காயம் ஏற்பட்டு கிடந்தார் என்றும் அந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த மணிகண்டன் என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிவந்து வளைவில் இடது பக்கம் திரும்பும்போது இரு சக்கர வாகனம் கீழே விழுந்ததில் அதில் வந்த 4 பேருக்கும் அடிபட்டு காயம் ஏற்பட்டதாக சொன்னார் நான் ஸ்கூட்டி வாகனத்தை பார்க்க TN 37 CZ 2017 என்ற எண்ணுள்ள ஸ்கூட்டி வாகனம் என தெரிந்துகொண்டேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3. அதை பார்த்த நாங்கள் காயம்பட்ட மணிகண்டன், அஸ்வின், மகேஷ் ஆகியோரை அந்த வழியாக வந்த கார் மூலம் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தோம் அப்போது நந்தகுமார் அந்த வழியாகவந்த சின்கோனா செல்லும் பஸ்ஸில் ஏறி சென்றுவிட்டார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4. ஸ்கூட்டி வாகனத்தில் வந்த அஸ்வின், நந்தகுமார், மணிகண்டன் ஆகியோருக்கு காயமும் விபத்தில் மகேஷ் என்பவர் இறந்துவிட்டதால் நந்தகுமார் என்பவர் வால்பாறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

5. இது சம்பந்தமாக 20-01-2023 அன்று காலை 8.00 மணிக்கு சம்பவயிடம் வந்து போலீசார் விசாரணை செய்து சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் அந்த பார்வை மகஜரில் நானும் கிளமெண்டும் சாட்சியாக இருந்து கையொப்பம் போட்டோம் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. நான் கையெழுத்து இட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் பெயர் என்னவென்று தெரியாது அவர் அங்கு இருந்தாரா என்றால் தெரியாது. விபத்து நடந்த போது இவர் தான் வண்டியை ஓட்டி வந்தாரா என்றால் தெரியாது. வண்டி ஓட்டமுடியாத நிலையில் தான் ரோட்டில் கிடந்தது என்றால் சரிதான்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.